DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.6/2024**

Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனிவேல் | | : |
| த/பெ | : கேசவபிள்ளை | மதம் | : |
| கிராமம் | : பெரம்பூர் | தொழில் | : தனியார் நிறுவனம் |
| வட்டம் | : சென்னை | வயது | : 45/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 07.07.2026**

**<u>குறுக்கு விசாரணை:</u> PW1**

1. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள அனைத்து சங்கதியும் நன்கு தெரியும். எதிரியை எவ்வாறு தெரியும் என்றால் எதிரி என் மனைவியின் நண்பர் ஆவார். மகாலட்சுமி எவ்வாறு தெரியும் என்றால் என் மனைவியுடன் படித்தவர் ஆவார். மகாலட்சுமியும் எதிரியும் என்ன உறவு முறை என்றால் உறவு முறை தெரியாது, உறவினர் என்று தெரியும். மகாலட்சுமியும் எதிரியும் உறவினர் என்ற விவரம் தெரிந்தும் பிரமாண வாக்குமூலத்தில் நண்பர்கள் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். மகாலட்சுமியும் எதிரியும் நண்பர்கள் என்று கூறியது பொய் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் 2017 ஆம் ஆண்டு எதிரி பணம் வாங்கியதாக தெரிவித்திருந்தேன் என்றால் சரிதான். 2017 ஆம்ஆண்டில் எந்த தேதி, எந்த மாதத்தில் பணம் வாங்கினார் என்று குறிப்பிடவில்லை என்றால் தேதி குறிப்பிடவில்லை மாதம் டிசம்பர் ஆகும். புகார் மனுவில் 8 மாதத்தில் எதிரி பணத்தை திருப்பி தருவதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். 2018 ஆம்ஆண்டில் இருந்து ஒரு ஆண்டிற்கு எதிரி வட்டி செலுத்தியதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். வட்டி

செலுத்தியதற்கு ஆணவம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ரொக்க பணமாக கொடுத்தார் ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை. 2019 ஆம் ஆண்டு எதிரி ஒரு கடன் பத்திரம் எழுதி கொடுத்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். பு.சா.ஆ.5 கடன் பத்திரம் அல்ல உறுதி மொழி பத்திரம் தான் தாக்கல் செய்துள்ளேன்.

2. இவ்வழக்கை திசை திருப்புவதற்காக கடன் பத்திரத்தை உறுதிமொழி பத்திரமாக தெரிவித்துள்ளேன் என்றால் அந்த ஆவணத்தை எதிரி தான் தயார் செய்து கொண்டு வந்தார். எதிரி தான் தயார் செய்தார் என்ற விவரத்தை புகார்மனு, பிரமாண வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். பு.சா.ஆ.5 ஆவணத்தை எதிரி தான் என் வீட்டிற்கு எடுத்து வந்து கொடுத்தார். பு.சா.ஆ.சா5 ஆவணம் எனது பெயரில் டிசம்பர் மாதமே வாங்கப்பட்டு ஜனவரி மாதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றால் எதிரி தான் ஆதார் அட்டை வாங்கி சென்று பத்திரத்தை வாங்கி வந்தார். பு.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள எதிரி மற்றும் அவரது கணவரின் கையெழுத்து நானே போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி உறுதி மொழி பத்திரத்தை மகாலட்சுமி சாட்சி கையெழுத்து இட்டுள்ளார் அந்த கையெழுத்தும் நானே போட்டேன் என்றால் சரியல்ல. உறுதி மொழி பத்திரத்தை எதிரி மற்றும் மகாலட்சமி சேர்ந்து வந்து தான் கொடுத்தார். எதிரி ரூ.1,00,000/– மட்டும் தான் மகாலட்சுமி மூலம் கடன் வாங்கினார் என்றும் அந்த பணத்தை திருப்பி செலுத்திவிட்டதாகவும், உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரில் கூறியவாறு பணம் கொடுக்கும் போது காசோலை வாங்கவில்லை என்றால் சரிதான். மகாலட்சுமிக்கு நான் பணம் கொடுத்து அவர் மீது இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். மகாலட்சுமி என்னிடம் பணம் வாங்கியபோது அவரிடம்

வங்கி காசோலை இல்லை என்பதால் எதிரியின் வங்கி காசோலை கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிரி வாங்கிய பணத்திற்கு தான் எதிரி காசோலை கொடுத்தார். கையெழுத்திடாமல் நிரப்பப்படாமல் மகாலட்சுமி கொடுத்த எதிரியின் காசோலையை நானாகவே பூர்த்தி செய்து கையெழுத்திட்டு காசோலை தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. காசோலை எதிரி தான் நிரப்பி கொடுத்தார். எதிரிக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். பு.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள கையெழுத்தும் காசோலையில் உள்ள கையெழுத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான்.

எதிர் தரப்பு வழக்கறிஞர் காசோலையில் உள்ள கையெழுத்து எதிரியுடையது இல்லை என்று கேள்வி எழுப்பி அதை கையெழுத்து நிபுணர் ஆய்விற்கு மனு தாக்கல் செய்ய இருப்பதாக கூறியதின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K